1972 பிப்ரவரி 1]

வந்திருக்கிறது. எனவே இருக்கின்ற வீட்டு மனைகளில் வீடு கட்டித் தருகின்ற திட்டம் அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது வீட்டு மனைகளை தந்துகொண்டு இருக்கிறோம். வீடு கட்டும் திட்டம் 203 கிராமங் களில் உருவாகி இருக்கிறது, என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தணியில் சுற்றுலா மாளிகை

* 253 வினா.—திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் போற்றும் மலைக்கோயில் பெற்றுள்ள திருத்தணியில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே. தமிழகத்திலே அதிக வருமானம் உள்ள 6 கோயில்களில் திருத்தணி ஒன்று என்ற காரணத்தால் நாளுக்கு நாள் பக்தர்களின் எண்ணிக்கை பெருகு கின்ற காரணத்தாலும் அங்கே ஒரு பயணிகள் விடுதியை அமைக்க அரசு இனியாவது முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, சுற்றுலா வாரியம் மூலமாக கட்டடம் கட்டப்பட்டு இருக்கிறதா, என்றுதான் கேள்வி. அதற்கு சுற்றுலா இல்லம் இப்போது தேவையில்லை. என்கின்ற எண்ணத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் அற நிலை பாதுகாப்பு இலாகாவின் மூலமாக அங்கே வருகிற பக்தர்கள் தங்குவதற்கு நல்ல வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, சுற்றுலாத் துறை மூலமாக திருத்தணியிலே அப்படி சுற்றுலா இல்லங்களை அமைக்க விரும்பாவிட்டால், அதை செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காட்டிற்கு ஏராளமான பயணிகள் வந்து கொண்டிருக் கிறார்கள். அது தீவாக இருக்கிறது. அங்கேயாவது இந்த சுற்றுலா இல்லம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது அப்படிப்பட்ட பிரச்சினை அரசினுடைய கவனத்தில் இல்லை. அங்கத்தினர் அவர்கள் அப்படிப்பட்ட எண்ணங்களை அரசுக்கு தெரிவிப்பாரானால் அதை விரைவிலே பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: லட்சக்கணக்கான பக்தர்கள் இப்படி க்ஷேத்திரங்களுக்கு போய் வருகிறார்கள். ஆகவே, அந்த க்ஷேத்திரங்களில் அதிக கவனம் செலுத்தி அங்கே பாதாள சாக்கடை, குடி நீர் வசதி போன்றவைகளை செய்து தரவேண்டுமென்ற முறையில் அரசு முயலுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, என்னுடைய இலாகாவில் நான் பார்க்க வேண்டியது சுற்றுலா பயணிகள் தவிர பாதாள சாக்கடை அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: வரும் பக்தர்கள் டூரிஸ்டுதான் என்று வைக்கலாம். சமயப் பற்றோடு டூர் செய்கிறார்கள். அவர்களுக்கு கட்டாயம் இந்த வசதிகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, பக்தர்களை பாதுகாக்கும் முயற்சியிலே பல நல்ல காரியங்கள் தமிழகத்திலே நிறைவேற்றி வருகிறோம். அதிலே சுற்றுலாத் துறையும் பாதுகாத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தனக் கட்டைகள் ஏலம்

* 254 வினா.—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு சந்தனக் கட்டைகள் ஏலம் விட்டதன் மூலம் கிடைத்த வருவாய் எவ்வளவு?

(இ) அது முந்தைய ஆண்டைவிட எந்த அளவுக்குக் குறைந்துள்ளது அல்லது அதிகரித்துள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தனக் கட்டைகள் ஏலம் விட்டதன் மூலம் 1970-71 ஆண்டு கிடைத்த வருவாய் பற்றிய விவரம் பின்வருமாறு:—

நிறை	வருவாய்
965 டன்கள்	ரூபாய் 83,04,130-00.

(இ) 1969-70 ஆண்டு ஏலம் விடப்பட்ட 891 டன்கள் நிறையுள்ள சந்தனக் கட்டைகள் மூலம் ரூபாய் 82,67,862—50 வருவாய் வந்தது. முந்தைய ஆண்டைவிட, 1970-71 ஆண்டில் முன்னைவிட 74 டன்கள் சந்தனக் கட்டைகள் அதிகமான விற்பனை செய்யப்பட்டு அதிக வருமானம் ரூபாய் 36,267—50 கிடைத்துள்ளது.